**அ.வ.எண்.1/2024**

**நாள் – 20.01.2025.**

**4 ம் வாதி – அருள்ராஜ், த/பெ.சிவன்நாடார்**

**கட்டளை 10 ன் கீழ் பதிவு செய்யும் 4 ம் வாதியின் விசாரணை வாக்குமூலம்**

1. 1 முதல் 3 வாதிகள் என் சகோதர சகோதிரிகள். என் தாத்தா பெயர் வைத்தியலிங்கநாடார். என் தாத்தாவின் அண்ணன் பெயர் குத்தாலிங்கநாடார். என் தாத்தாவின் தகப்பனார் பெயர் சிவநாடார்.

2. குத்தாலிங்க நாடாருக்கு 2 மகன்கள் சிவநாடார் மற்றும் வேலுமணிநாடார் உள்ளார்கள்.

3. எங்கள் உறவினரான குத்தாலிங்க நாடாருக்கு செல்லப்பாண்டியன் என்ற மகன் இல்லை.

4. தபசில் சொத்து பாகம் பிரிக்கும்போது தபசில் சொத்திலோ தபசில் சொத்தின் அருகிலோ குத்தாலிங்கத்திற்கு பாகம் ஒதுக்கப்படவில்லை.

5. தற்போது பட்டா என் தகப்பனார் பெயரிலும், எங்கள் பெயரிலும் கூட்டாக உள்ளது.

6. தபசில் சொத்தை செல்லப்பாண்டியன் 1967 ல் கிரையம் பெற்று செல்லப்பாண்டியனிடமிருந்து பிரதிவாதி 2007 ல் மறு கிரையம் பெற்றார்.

7. செல்லப்பாண்டியன் என்பவர் நவமணிநாடார், குழந்தைவேல் நாடார், சுப்பையாநாடாரிடம் கிரையம் பெற்றார். அந்த மூவரும் என் குடும்பத்தை சாராதவர்கள்.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி

**அ.வ.எண்.1/2024**

**நாள் – 20.01.2025.**

**பிரதிவாதி – சுப்பிரமணியநாடார் த/பெ.குத்தாலிங்கநாடார்**

**கட்டளை 10 ன் கீழ் பதிவு செய்யும் பிரதிவாதியின் விசாரணை வாக்குமூலம்**

1. என் தகப்பனார் குத்தாலிங்கம் என்பவர் வைத்தியலிங்கம் என்பவருடன் உடன் பிறந்தவர் அல்ல. நான் கிரையம் பெற்ற செல்லப்பாண்டியன் என் உறவினர் அல்ல.

2. சுப்பையா, குழந்தைவேல் மற்றும் நவமணிக்கு தபசில் சொத்து பூர்விக பாத்தியமானது. அவர்களின் பெயரில் வருவாய் ஆவணங்கள் கிடையாது. எங்கள் பெயரில் தனிப்பட்டா வழங்கப்பட்டது. வழக்கு நிலுவையில் இருப்பதால் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யவில்லை.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி